# மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

## க.பொ.த (சாதாரணதர)ப்பரீட்சை - 2019

## இரண்டாம் தவணை

| புவியியல் I,II | 61 | T | I,II | நேரம் - மூன்று மணித்தியாலம் |
|---|---|---|---|---|

சுட்டெண் ..........................................

## புவியியல் - I

**கவனிக்க:-**
- இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக

**மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

- **1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. புவிக்கோளத்தில் கண்ட ஓடு, சமுத்திர ஓடு எனும் இரு பிரிவுகளை மட்டும் கொண்டதாக ......................................................... காணப்படுகின்றது. (கற்கோளம் / ஓடு / மூடி)
2. மாறன் மண்டலமானது புவிமேற்பரப்பிலிருந்து .......................................... கிலோமீற்றர் உயரம் வரை பரந்து காணப்படுகின்றது. (8 - 12 / 20 - 30 / 40 - 50)
3. ............................................................. ஒன்றில் கண்டங்களாகவோ அல்லது தீவுகளாகவோ காணப்படுகின்றன. (புவிமேற்பரப்பு / நிலப்பகுதிகள் / நாடுகள்)
4. றைன் நதி ............................................................. உருவாகி பாய்ந்து ஓடுகின்றது. (ஊற்றிலிருந்து / ஏரியிலிருந்து / உருகிய பனியிலிருந்து)
5. உலகில் அகலக்கோட்டு வெப்பநிலைப் பரம்பலை அடிப்படையாகக் கொண்ட…………….பிரதான காலநிலை வலயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.(மூன்று / நான்கு / ஆறு)
6. பயிர்ச்செய்கையால் பெறப்படும் உற்பத்தியை மூலப்பொருளாகக் கொண்ட கைத்தொழில் உற்பத்திகளில் ஒன்றாக ........................................................... விளங்குகின்றது. (இரசாயன வளமாக்கி / ரயர் / இரசாயன கிருமிநாசினி)
7. தேயிலை ஆராய்ச்சி நிலையமாகிய தலவாக்கலை மத்திய மாகாணத்தின் .................................... மாவட்டத்தில் அமைந்துள்ளது. (மாத்தளை / கண்டி / நுவரெலியா)
8. இலங்கையின் இறப்பர் உற்பத்திகள் ஒஸ்திரியா, பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி, கிறீஸ், இத்தாலி ஆகிய ........................................................... நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. (ஆபிரிக்க / ஐரோப்பிய / அவுஸ்திரேலியா)
9. வெப்பமின் உற்பத்தி நிலையம், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ………………………...என்பன இரண்டும் அமைந்துள்ளன. (சபுகஸ்கந்தவில் / களனிதிஸ்ஸவில் / கனியோனில்)
10. ஒவ்வொன்றும் 1000 சதுரகிலோமீற்றர்களைக் காட்டும் தொண்ணூற்று இரண்டு இலங்கை 1:50000 தேசப்படங்களில் ஒரு படத்தில் காட்டப்படும் பிரதேசத்தின் நீளம் .................................. கிலோமீற்றர்கள் ஆகும். (25 /40 /5)


- **11 தொடக்கம் 15 வரையுள்ள ஒவ்வொரு கூற்றினையும் வாசித்து அவை சரியாயின் 'ச' ஐயும் பிழையாயின் 'பி' ஐயும் சுற்றி வட்டம் வரைக.**

11. புவியின் உயிர்க்கோளத்தில் விலங்குகள் இல்லாமல் தாவரங்களும் தாவரங்கள் இல்லாமல் விலங்குகளும் உயிர் வாழ முடியாத நிலையில் அவற்றின் இடைத்தொடர்பு செயன்முறை காணப்படுகின்றது. ச / பி
12. புவியின் மொத்த மேற்பரப்பின் எழுபத்தியொரு வீதம் கொண்ட நிலப்பகுதிகள் கண்டங்களாகவோ அல்லது தீவுகளாகவோ காணப்படுகின்றன. ச / பி
13. மத்தியதரைக் காலநிலையானது முனைவுக் காலநிலை வலயத்தில் ஒரு சிறப்பம்சமாகக் காணப்படுகின்றது. ச / பி
14. விருத்தியடைந்து வரும் கைத்தொழில் துறைக்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்குவதிலும் விவசாயத்துறை பங்கு வகிக்கின்றது. ச / பி
15. சனத்தொகை தொடர்பான கற்கையில் பிறப்பின் பின்னர் உரித்தாக்கிக் கொள்கின்ற தேசியம், சமயம், மொழி, எழுத்தறிவு போன்ற விடயங்களும் முக்கியம் பெறுகின்றன. ச / பி

- **16 தொடக்கம் 26 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துக.**

16. அவுஸ்திரேலியாக் கண்டத்தின் ..................................................... திசையில் அதன் கண்டமேடையில் அமைந்த தீவாக தஸ்மானியா விளங்குகின்றது.
17. இலங்கையின் சுற்றுலா அபிவிருத்திச் சபையினால் இலங்கையானது பிரதான ஏழு ...................................................... வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
18. நீர்க்கோளத்தில் உள்ள நீர், வளிக்கோளத்தில் உள்ள வளி, கற்கோளத்திற்கான கனியவளங்கள் என்பன ...................................................... இயற்கை வளங்கள் என பாகுபடுத்தப்படுகின்றன.
19. முதன்மைப் பாறைகளின் எச்சங்களினால் உருவாக்கப்படுவதனால் ........................................... இரண்டாம் நிலைப் பாறைகள் எனப்படுகின்றன.
20. நாட்டுக்குரிய சமுத்திர எல்லையைத் தீர்மானிக்கும் சர்வதேச சமுத்திர சட்டத்தின்படிக்கு அனைத்து கரையோர நாடுகளினதும் ஆள்புல கடல் எல்லை கரையோரத்தில் இருந்து ..................................................... கடல் மைல்கள் கடந்து செல்லாத வகையில் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.
21. உலகின் சனத்தொகைப் பருமன் அடிப்படையில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் ................................................ முதலாம் இடத்தைப் பெற்றுக் கொள்கின்றது.
22. இலங்கையில் வடக்கிற்கான புகையிரதப்பாதை மீண்டும் திருத்தி அமைக்கப்பட்ட பின் உத்தரதேவி புகையிரதசேவைக்கு ................................................. நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகையிரதம் பயன்படுத்தப்படுகின்றது.

- **23 தொடக்கம் 26 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் வரைபினைப் பயன்படுத்துக.**




இரும்புருக்கு உற்பத்தி நாடுகள்



பக்கம் 3 ஐப் பார்க்க

23. இரும்பு உருக்கு உற்பத்தியில் 2007 ஐ விட 2008 இல் கூடிய உற்பத்தி அதிகரிப்பைக் காட்டி நிற்கும் நாடு ................................................

24. இரும்பு உருக்கு உற்பத்தியில் 2007 ஐ விட 2008 இல் உற்பத்திக் குறைவு கூடிய அளவில் இடம்பெற்ற நாடு ......................................................

25. ஒப்பீட்டு அடிப்படையில் 2007 ஐ விட 2008 இல் உலகின் மொத்த உற்பத்தி அளவு ....................................................

26. முன்னிலை வகிக்கும் இரும்பு உற்பத்தி நாடுகள் ஏழில் மிகக் குறைவான உற்பத்தியைக் காட்டும் நாடு .....................................................

- **27 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு அ மற்றும் ஆ என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. "அ" நிரலிலுள்ள தகவல்களுடன் "ஆ" நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது சரியான ஒழுங்கினைக் காட்டும் விடைக்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

27.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| இலங்கையின் தரைத்தோற்ற உயர வேறுபாடு | தட்டையான நிலத்துக்கான பெயர் |
| 1. 0 - 30 மீற்றர் | A. மேட்டுநிலம் |
| 2. 30 - 300 மீற்றர் | B. கரையோரச் சமவெளி |
| 3. 300 மீற்றருக்கு மேல் | C. கண்டமேடை |
| | D. தொடரலைச் சமவெளி |

(1) A, C, D  (2) B, A, D  (3) B, D, A  (4) A, B, D  (.........)

28.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| கண்டங்கள் | ஏரிகள் |
| 1. வட அமெரிக்கா | A. விக்ரோரியா ஏரி |
| 2. தென் அமெரிக்கா | B. சுப்பீரியர் ஏரி |
| 3. ஆபிரிக்கா | C. தித்திக்கா ஏரி |
| | D. பைக்கால் ஏரி |

(1) B, C, A  (2) C, B, A  (3) A, B, D  (4) C, B, D  (.........)

29.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| கண்டங்கள் | சனத்தொகைப் பரம்பல் வீதம் |
| 1. ஆசியா | A. 08% |
| 2. ஆபிரிக்கா | B. 10% |
| 3. ஐரோப்பா | C. 16% |
| | D. 60% |

(1). D, B, A  (2). C, B, A  (3). D, C, B  (4). D, B, C  (.........)

30.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| சுருக்கக் குறியீடு | அபிவிருத்திக் குறிகாட்டி |
| 1. PQLI | A. பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் |
| 2. HDI | B. மனித அபிவிருத்திச் சுட்டெண் |
| 3. HPI | C. மனித வறுமைச் சுட்டெண் |

(1.) A, B, C  (2). B, C, A  (3). A, C, B  (4.) C, A, B  (.........)

- **31 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

31. பகுதியளவில் (பெரும்பகுதி) நிலத்தால் சூழப்பட்ட கடல்,
(1) கஸ்பியன் கடல் (2) செங்கடல் (3)அரேபியன் கடல் (4) பசுபிக் கடல் (.........)

32. "மொறின் 10" என்பது,
(1) நெல்லின் ஒருவகை  (2) கோதுமையின் ஒருவகை
(3) சோளத்தின் ஒருவகை  (4) பசுக்களின் ஒருவகை (.........)



பக்கம் 4 ஐப் பார்க்க

33. இன்றைய உலகில் அதிகமான கேள்வியைக் கொண்டிருக்கும் கப்பல்கள்,
    (1) இயற்கை வாயுவால் இயங்கும் கப்பல்கள்.
    (2) அதிசொகுசு சுற்றுலாக் கப்பல்கள்.
    (3) பாரமான பொருட்களை எடுத்துச் செல்லக்கூடிய கப்பல்கள்.
    (4) விமானம் தாங்கிக் கப்பல்கள். (.........)

34. இலங்கையில் கட்டடங்கள் வீதிகள் அமைப்பதற்கு பெருமளவில் பயன்படுத்தப்படும் பாறைகள்,
    (1 கருங்கல் பாறைகள் (2) பளிங்கடுக்குப் பாறைகள்
    (3)சுண்ணாம்புக் கற்பாறைகள் (4) முருகைக் கற்பாறைகள் (.........)

35. இன்று உலகின் சனத்தொகைப் பரம்பல் மீதான பௌதிக மானிடக் காரணிகள் கொண்டிருந்த செல்வாக்கைக் குறைக்கும் விடயம்,
    (1) உட்கட்டமைப்பு வசதி விருத்தி. (2) விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம்.
    (3) நிர்வாக நடவடிக்கைகள். (4) காலநிலை. (.........)

36. இலங்கை 1 : 50000 தேசப்படங்களில் பல்வேறு தரை உயரங்களைக் கொண்ட சமவுயரக் கோடுகள் மூலம் காட்டப்படுவது.
    (1) வடிகாலமைப்புக்கள் (2) பௌதிக அம்சங்கள்
    (3) திரிகோண கணித நிலையங்கள் (4) நிலவுருவங்கள் (.........)

- **கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டிருக்கும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட தலைப்புச் சோடிகளை நன்கு பரிசீலித்து 37 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| A. | (1) படப் பிரதேசத்தின் பரப்பளவு<br>(2) பட அளவுத் திட்டம் | B. | (1) அபிவிருத்தி<br>(2) அதிவேக நெடுஞ்சாலை |
| C. | (1) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு<br>(2) போட்டிமிக்க தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் | D. | (1) கொழும்பின் சனத்தொகை<br>(2) கம்பஹாவின் சனத்தொகை |

37. முதலாவதைப் பற்றி அறிய இரண்டாவது பயன்படுத்தப்படும் என்பதைக் காட்டும் சோடிகள்,
    (1) A, B, C (2) B, C, D (3) D, B, A (4) A, B, D

38. முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் அதிகரிப்புக்கு காரணமாகும் என்பதைக் காட்டும் சோடிகள்,
    (1) A, C, D (2) A, B, D (3) B, C, D (4) A, B, C

39. இரண்டாவதில் ஏற்படும் மாற்றம் முதலாவதில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்பதைக் காட்டும் சோடி,
    (1) A (2) B (3) C (4). D

40. முதலாவது, இரண்டாவது இரண்டும் அதிகரித்தால் அங்கு பிரச்சினையும் அதிகரிக்கும் என்பதைக் காட்டும் சோடி,
    (1) A (2) B (3).C (4) D

($1 \times 40 = 40$ புள்ளிகள்)



பக்கம் 5 ஐப் பார்க்க

## புவியியல் - II

- **இவ்வினாத்தாள் I, II என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.**
- **பகுதி I இன் வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.**
- **பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.**
- **எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.**

### பகுதி I

01.(அ) உமக்கு தரப்பட்டுள்ள 1:50000 இடவிளக்கப் படத்தின் பகுதியைப் பரிசீலித்து அதனடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**இலக்கம் (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து உங்கள் விடைத்தாளில் எழுதுக.**

(i) படத்தில் A - B கோட்டினால் காட்டப்படுவது,
(பள்ளத்தாக்கு / சுவடு / காற்றிடைவெளி)

(ii) படப்பிரதேசத்தில் A தர வீதியின் நீளம் அண்ணளவாக,
(10.5 km / 21 km/42 km )

(iii) X எனக் காட்டப்பட்டுள்ள நிலையத்தினூடாகச் செல்லும் நெடுங்கோட்டின் பெயர்,
(கிழக்கு நெடுங்கோடு $80^0$ 35’ / மேற்கு நெடுங்கோடு $80^0$ 35’ /கிழக்கு நெடுங்கோடு $70^0$ 35’ )

(iv) படப்பிரதேசத்தில் அதிக நிலப்பரப்பில் பயிராகும் பெருந்தோட்டப் பயிர் யாது?
(தென்னை, தேயிலை, இறப்பர்)

(v) E இல் இருந்து F வரை காணப்படும் நிர்வாகப் பிரிவு எல்லை யாது?
(மாவட்டஎல்லை, மாகாணஎல்லை, பிரதேச செயலகப்பிரிவு எல்லை)


(vi) பிரதான வீதிகள் இணையும் சந்திகளுக்கு அருகில் காணப்படும் இரண்டு அரச சேவை நிறுவனங்களைக் குறிப்பிடுக.

(vii) படப்பிரதேசத்தில் உயரமான நிலப்பகுதிகள் எத்தேவைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன?

(viii) C என காட்டப்பட்டுள்ள அடைப்பில் காணப்படும் வடிகாலமைப்பு யாது?

(ix) G எனக் காட்டப்பட்டுள்ள அடைப்பில் வீதியின் வளைவுகளைத் தீர்மானித்த விடயம் யாது? (10 புள்ளிகள்)

ஆ. உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.






பக்கம் 6 ஐப் பார்க்க

**(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. உலகப்படத்தில் ஒவ்வொரு வினாவிற்குமுரிய சரியான விடையைக் குறித்துக் காட்டும் எழுத்தினைத் தெரிவுசெய்து அதனை உங்கள் விடைத்தாளில் எழுதுக.**

(i) அற்லஸ் மலைத்தொடர் A, B, C

(ii) இலங்கை ஏற்றுமதி செய்யும் காரீயத்தைப் பெற்றுக்கொள்ளும் பிரதான நாடாகிய ஜப்பான். D, E, F


(iii) ஹெக்லா எரிமலை காணப்படும் ஐஸ்லாந்து தீவு. G, H, I

(iv) உலகின் பெரிய அயனமண்டல மழைக்காடாகிய அமேசன். K, L, M

(v) நுல்லாபார் சமவெளி N, O, P

($1 \times 5 = 5$ புள்ளிகள்)

இ. உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.






பக்கம் 7 ஐப் பார்க்க

**(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. இலங்கைப்படத்தில் ஒவ்வொரு வினாவிற்குமுரிய சரியான விடையைக் குறித்துக் காட்டும் எழுத்தினைத் தெரிவுசெய்து அதனை விடைத்தாளில் எழுதுக.**

( i) அண்மையில் இலங்கையில் சோளச் செய்கையில் சேனா படைப்புழுவின் தாக்கம் முதலில் கண்டறியப்பட்ட அம்பாறை மாவட்டம். A, B, C

( ii) நீர்கொழும்பு கடல்நீரேரியைச் சுட்டி நிற்கும் எழுத்து. D, E, F

(iii) இலங்கையின் தென்னை முக்கோண வலயத்தை இணைக்கும் வலயங்களில் ஒன்றாகிய குருநாகல் G, H, I


(iv) இலங்கையின் சுற்றுலா வலயங்களில் ஒன்றாகிய மத்திய மலை நாட்டின் முக்கிய நிலையமாகிய நுவரெலியா. K, L, M

(v) பந்துக்களி பரம்பிக் காணப்படும் ஒட்டிச்சுட்டான். N, O, P

($1 \times 5 = 5$ புள்ளிகள்)

## பகுதி II

02. புவியின் நன்னீரில் 1% ஆகக் காணப்படும் பயன்படுத்தக்கூடிய மேற்பரப்பு நீரின் பிரிவுகளின் வீதாசாரத்தைக் காட்டும் அருகிலுள்ள வரிப்படத்தில்




( i) A,B என்பவற்றால் காட்டப்பட்டுள்ள நீரின் பரம்பல் பிரிவுகளை முறையே பெயரிடுக (2 புள்ளிகள்)

( ii) மனிதருக்கான நீரின் பயன்பாடுகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

( iii) நீரின் தரம் குறைவதற்குக் காரணமாகும் மனித நடவடிக்கைகளைக் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினால்** நீரின் தரம் எவ்வாறு குறைகின்றது என விபரிக்க. (5 புள்ளிகள்)

03(.i).(a)இலங்கை தவிர்ந்த ஆசியாவின் பிரதான நெற்செய்கை பண்ணப்படும் நாடு **ஒன்றைக்** குறிப்பிடுக. (1 புள்ளி)

( b). அவுஸ்திரேலியாவில் நெற்பயிர்ச்செய்கை பண்ணப்படும் முக்கியம் பெறும் பிரதேசத்தைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

( ii) தற்போது உலகின் நெற்பயிர்ச்செய்கையில் அவதானிக்கக்கூடிய விசேட பண்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

( iii).(a)இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காகச் செயற்படும் நிறுவனங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

b. இலங்கையில் தேயிலை ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக உற்பதியாகும் பல்வேறு தேயிலை வடிவங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)



பக்கம் 8 ஐப் பார்க்க

04.(i)(a) இரும்பு உருக்கிற்குப் பதிலீடாகப் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** பிரதியீட்டு உற்பத்திகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) நுகர்வோரைக் கவரக்கூடிய வகையில் தற்போது மோட்டார் வாகன உற்பத்திக் கைத்தொழிலில் பிரயோகிக்கப்படும் நுட்பங்கள் **மூன்று** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

( iii).(i)a. இலங்கையின் பிரதான மைக்ரோ மோட்டார் வாகனம் பொருத்தும் தொழிற்சாலை எங்கு அமைந்துள்ளது? (1 புள்ளி)

( b) இலங்கையில் படகு கட்டும் நிலையம் அமைந்துள்ள **ஒரு** இடத்தைக் குறிப்பிடுக (1 புள்ளி)

(ii) இலங்கையில் மோட்டார் வாகன பொருத்தும் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

05.(i) உலகின் பிரதான அயனமழைக் காடுகள் **இரண்டின்** பெயரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) அயனமழைக் காடுகளின் பண்புகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(iii) காடுகளின் முக்கியத்துவங்கள் **மூன்றைக்** குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)

06.

( i) இலங்கையில் "நிலைத்திரு மின்சக்தி அதிகாரசபை" அமைக்கப்பட்டதன் நோக்கங்கள், **இரண்டு** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) மின்சக்தி உற்பத்தி மூலங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(r) இலங்கையில் வலு சக்திப் பயன்பாட்டில் எழும் பிரச்சினைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு **ஒன்றைப்** பற்றி விளக்குக. (5 புள்ளிகள்)

07.(i) சனத்தொகை பருமன் அடிப்படையில் பின்வரும் நாடுகளுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

(a) ஆயிரம் மில்லியனுக்கு அதிக சனத்தொகை கொண்ட நாடு.

( b) 200 - 400 மில்லியனுக்கு இடைப்பட்ட சனத்தொகை கொண்ட நாடு. (2 புள்ளிகள்)

( ii) உலகில் சனத்தொகை ஐதாக வாழும் பிரதேசங்களின் பௌதீக இயல்புகள் **மூன்று** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)


( iii) (a)சனத்தொகை முதுமை அடைதல் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

( b) இலங்கையில் சனத்தொகை முதுமை அடைதல் ஏற்படுவதற்கான காரணங்கள் **இரண்டைக்** குறிப்பிட்டு **ஒன்றை** விளக்குக. (3 புள்ளிகள்)

08.(i) மானிட அபிவிருத்தி கூட்டெண்ணிற்கேற்ப அடையாளம் காணக்கூடிய நாடுகளின் பிரிவுகளில் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) அபிவிருத்திச் செயன்முறைகளின் எதிர்விளைவுகள் **மூன்று** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

( iii) இலங்கையில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதால் ஏற்படக்கூடிய சாதகமான விளைவுகள் **மூன்றைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றை** விளக்குக. (5 புள்ளிகள்)



N
Patkolagolla
Galewela
Nabadagahawatta
Migaskotuwa
Paluhombawa
Hombawa
Co-operative Shop
Ranwediyawa
Hatamuna
Pahala Bambawa
Dambagolla
KUMBAGOLLA
294
Weragalawatta
Kospotha
Ranwediyawa
Ihala Bambawa
Bambawa
B 346
Galdagala Kanda
GETAHENA
Dambagolla
Divulgaskotuwa
F
Walakumbura
Walpelakotuwa
Danduyaya
D
Pihillayaya
C
BAMRAKANDA
427
Beligamuwa
G
Wahakotte
A
B
BELIGAMA ESTATE
Turpentine
280
Kalvari Kanda
Beligamuwa
Medabedda North
Medabedda
WAHACOTTE
Siyambalagah
Medabedda South
Lenawala
Elamalpota
Weralanda
Yatiwehera
Palapatw
Hathadukkuwa
Ponchirambadagalla
Dembawa
Elamalpota
Yatiwehera
Lenawala
E
AA6
Dembawa
Mahawatta
Hevenewela
Neerangamuwa
BELIGAMA ESTATE
DAMBAWAGAMA
Co-operative Shop
Miriskutuwa
Lenawala
Nugahapola
Hevenewela
Marakkalabage
Hevenewela
Sinhalabage
Wegodapola
Wegodapola
Madipola
Marakkalabage
WEGODAPOLA
Japalagama
Jahakagama
PALLEPOLA
Nilannoruwa Colony
Nilannoruwa
Madipola
Sinhalabage
Kendangamuwa
KENDANGAMUWA ESTATE
Madipola
Co-operative Shop
Nilannoruwa
275
175
Pallepola 13 km
80°35′
180
7°45′
SCALE 1 : 50 000

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்
க.பொ.த.(சாதாரணதர)ப்பரீட்சை - 2019
இரண்டாம் தவணை

| புவியியல் I,II | விடைகள் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## புவியியல் - I

1. ஓடு
2. 8 – 12
3. நிலப்பகுதிகள்
4. உருகிய பனியிலிருந்து
5. மூன்று
6. ரயர்
7. நுவரெலியா
8. ஐரோப்பிய
9. சபுகஸ்கந்த
10. 40
11. ச
12. பி
13. பி
14. ச
15. ச
16. தென்
17. சுற்றுலா
18. உயிரற்ற
19. அடையல் பாறைகள்
20. பன்னிரண்டு
21. சீனா
22. இந்தியா
23. சீனா
24. ஐக்கிய இராச்சியம்
25. குறைவடைகின்றது
26. ஜேர்மனி
27. 3(B, D, A)
28. 1(B, C, A)
29. 3(D, C, B)
30. 1(A, B, C)
31. 2 (செங்கடல்)
32. 2 (கோதுமையின் ஒருவகை)
33. 3 (பாரமான பொருட்களை எடுத்துச் செல்லக்கூடிய கப்பல்கள்)
34. 2(பளிங்கடுக்குப் பாறைகள்)
35. 2(விஞ்ஞான தொழில்நுட்ப முறைமையின் முன்னேற்றம்)
36. 4 (நிலவுருவங்கள்)
37. 1(A, B, C)
38. 3(B, C, D)
39. 1( A )
40. 4( D )

($1 \times 40 = 40$ புள்ளிகள்)

# புவியியல் II

## பகுதி I

01.அ.(i). காற்றிடைவெளி

( ii.) 10.5 km

(iii.) கிழக்கு நெடுங்கோடு $80^0$ 35’

( iv.) தென்னை

( v.) மாகாண எல்லை

( vi.) அஞ்சல் அலுவலகம் / வைத்தியசாலை / பாடசாலை

(vii.) பிற பயிர்ச்செய்கை

(viii.) மரநிகர் வடிகாலமைப்பு

( ix.) சரிவுகூடிய தரையமைப்பு

(vi ம் வினாவின் விடைக்கு 2 புள்ளிகள் ஏனைய விடைகளுக்கு 1 புள்ளி வீதம் மொத்தம் 10 புள்ளிகள்)

ஆ. (i.) A (ii). D (iii). H (iv). L (v). N

($1\times 5 = 5$புள்ளிகள்)

இ. (i.) A (ii.) F (iii.) I (iv). L ( v). O

($1\times 5 = 5$ புள்ளிகள்)

## பகுதி II

02(.i.) A - ஏரிநீர் B - மணணீர் (2 புள்ளிகள்)

(ii.) குடிக்க, வீட்டுத்தேவைக்கு.
விவசாயத்திற்கு.
கைத்தொழிலுக்கு.
போக்குவரத்திற்கு.

மூன்று விடயங்களைக் குறிப்பிட்டால் (3 புள்ளிகள்)

(iii.) கைத்தொழில் நடவடிக்கை, விவசாயம், இறந்த எச்சங்கள்

மூன்று விடயங்களைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்கினால் (5 புள்ளிகள்)

03.(i.)(a.) தாய்லாந்து /சீனா /இந்தியா /இந்தோனேசியா /யப்பான் /பாகிஸ்தான் / வங்காளதேசம் மியான்மார்

(ஒரு நாட்டினைக் குறிப்பிட்டால் 1 புள்ளி)

(b.) மரேடார்லிங் பள்ளத்தாக்கு (சரியாகக் குறிப்பிட்டால்) (1 புள்ளி)

( ii). தொழில்நுட்பப் பயன்பாடு / சேதன உரங்களின் பயன்பாட்டில் கவனம் / நவீன விதைகளின் அறிமுகம் / விசேட தரங்களைக் கொண்ட அரிசி உற்பத்தி (தங்க அரிசி) / தயாரிப்பு மற்றும் பொதி செய்தலின் நுட்ப முறைகள்

(யாதேனும் மூன்றினைக் குறிப்பிட்டால்)

(3 புள்ளிகள்)

(iii.) (a.) தேயிலை ஆராய்ச்சி நிலையம்.
சிறுதேயிலை பெருந்தோட்ட அபிவிருத்தி அதிகார சபை.
இலங்கைத் தேயிலைச் சபை

மூன்றினைக் குறிப்பிட்டால் (3 புள்ளிகள்)

(b.) உடனடித் தேயிலை, தேயிலைக் கட்டிகள், கோப்பித் தேயிலை, பச்சைத் தேயிலை, ரான் தேயிலை, கறுவாத் தேயிலை.

(யாதேனும் இரண்டினைக் குறிப்பிட்டால்)

(2 புள்ளிகள்)

04.(i). அலுமினியம், மரங்கள், பிளாஸ்ரிக்

இரண்டினைக் குறிப்பிட்டால் (2 புள்ளி)

( ii.) எரிபொருள் சிக்கன வாகன உற்பத்தி, சிறிய வாகன உற்பத்தி, சூழல் நேய வாகன உற்பத்தி, அதி உச்ச பாதுகாப்பினையும் வசதிகளையும் கொண்ட வாகன உற்பத்தி, அதி சொகுசு வாகன உற்பத்தி.

(யாதேனும் மூன்றினைக் குறிப்பிட்டால்)
(3 புள்ளிகள்)

(iii.)(i).(a). பொல்காவலையில் (சரியாகக் குறிப்பிட்டால்) (1 புள்ளி)

(b) பேருவளை / களுத்துறை / நீர்கொழும்பு / யாழ்ப்பாணம் / மட்டக்குளி / பயாகல / திருகோணமலை / பாணந்துறை / மிரிஸ்ஸ / கொரல்லாவல

(யாதேனும் ஒரு இடத்தினைக் குறிப்பிட்டால்)
(1 புள்ளி)

(ii.) உயர்மட்டத் தொழில்நுட்பத் திறன்களைப் பயன்படுத்தும் பெரிய தொழிற்சாலைகள் இன்மை.
இறக்குமதியாகும் வாகனங்களுடன் சந்தையில் போட்டியிடல்.
தொழில்நுட்பத்துடன் இணைந்த பிரச்சினைகள்.
பிரதான கைத்தொழிலாகப் பரம்பலடையாமை.
மூலதனப் பற்றாக்குறை.

(யாதேனும் மூன்றினைக் குறிப்பிட்டால்)
(3 புள்ளிகள்)

05.(i.) அமேசன், கொங்கோ இரண்டினையும் குறிப்பிட்டால் (2 புள்ளி)

(ii.) உயர் மட்டத்திலான உயிர்ப்பல்வகைமை.
விரைவான தாவர வளர்ச்சி.
பல்வேறு மட்டத்திலான மரங்கள்.
அதிக இலைகளும் அகன்ற இலைகளும்.
கொடிகள் மற்றும் கீழ்வளரிகள்.
மூடுதாவரங்கள். (மூன்று பண்புகளைக் குறிப்பிட்டால்)
(3 புள்ளிகள்)

( iii.) உயிர்ப்பல்வகைமை பாதுகாக்கப்படுதல்.
வனஜீவராசிகளின் பாதுகாப்பும் நிலைத்திருப்பும்.
நீரூட்டப் பிரதேசமாதல்.
தரைக்கீழ் நீர் சேகரிப்பு பாதுகாப்பும்
உணவு, மருந்து, அரிமரங்கள், எரிபொருள் பெறுவதற்கு.
தூய்மையான வளிமண்டல இருப்புக்கு

(மூன்று முக்கியத்துவங்களைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்கினால்)
(5 புள்ளிகள்)

06. (i.) மின்சக்திக்கான கேள்வியைப் பூர்த்தி செய்தல்.
குறைந்த செலவிலான வலுச்சக்தி உற்பத்தி இரண்டினையும் குறிப்பிட்டால் (2 புள்ளிகள்)

(ii.) நீர், நிலக்கரி, காற்று, சூரிய சக்தி, நிலநெய், உயிர்வாயு

(யாதேனும் மூன்றினைக் குறிப்பிட்டால்)
(3 புள்ளிகள்)

(iii). செலவு அதிகரிப்பு
கனிய எண்ணெய் இறக்குமதிக்காக அதிக பணம் ஒதுக்கல்.
பயன்பாட்டின் போதான வீண் விரயம்.
இயற்கை அனர்த்தப் பாதிப்பு
சூழல் காரணிகளால் தீர்மானிக்கப்படுதல்.
(மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்கினால்) 5 புள்ளிகள்

07(.i.) (a). சீனா / இந்தியா ஒன்றினைக்குறிப்பிட்டால் (1 புள்ளி)
(b) USA / இந்தோனேசியா / பிரேசில் ஒன்றினைக்குறிப்பிட்டால் (1 புள்ளி)

( ii). அதிக குளிர், அதிக வெப்பம், அதிக உயரம், அதிகமழை
(மூன்று இயல்புகளைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

(iii) (a) 59 வயதுக்கு மேற்பட்ட தங்கியிருப்போர் எண்ணிக்கை அதிகரித்தல். (2 புள்ளிகள்)
(b) பிறப்பு வீதம் குறைதல், ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல்.
இரண்டு காரணங்களைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்கினால் 3 புள்ளிகள்

08.(i.) மானிட அபிவிருத்தி மிக உயர்வாக உள்ள நாடுகள்.
மானிட அபிவிருத்தி உயர்வாக உள்ள நாடுகள்.
இடைத்தர மானிட அபிவிருத்தி உள்ள நாடுகள்.
தாழ்மட்ட மானிட அபிவிருத்தி உள்ள நாடுகள். (இரண்டினைக் குறிப்பிட்டால்)
(2 புள்ளிகள்)

(ii.) அபரிமித இயற்கை வளங்களின் நுகர்வு.
சூழல் மாசடைதல்.
இயற்கை வள சமநிலை குலைவு.
மாற்று வளங்களைத் தேடல்.
வளப்பற்றாக்குறை.
வளங்களைப் பெறுவதற்கான போட்டி.
வளங்கள் குறைவடைதல். (மூன்றினைக் குறிப்பிட்டால்)
(3 புள்ளிகள்)

( iii.) புதிய பிரதேசங்களில் அபிவிருத்தி.
சந்தைகள் விரிவடைதல்.
புதிய உற்பத்திகள் விரைவில் சந்தையைச் சென்றடைதல்.
பயணிகள் பொருட்களின் அசைவு விரைவுபடுத்தப்படல்.
நேரம் மீதமாதல்.
புதிய தொழில்நுட்ப வாய்ப்புக்கள் உருவாதல்.
வீதி வலையமைப்புக்களில் மாற்றம் ஏற்படும்
உள்ளக இடப்பெயர்வுப்பாங்குகள் மாற்றமடைதல்
(மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்கினால்)
(5 புள்ளிகள்)